


# ஆபத்துக்காலங்களில் வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் சேமித்து வைத்தல்

செஞ்சிலுவை/செம்பிறை அலுவலர் மற்றும் தன்னார்வப் பணியாளருக்கான ஒரு களப்பணிக் கையேடு


International Federation of Red Cross and Red Crescent Societies

Indian Red Cross Society

## மறுதலிப்பு

இந்த ஆவணம், வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் சேமித்து வைத்தல் குறித்த பொதுவான ஒரு கையேடாக முன்வைக்கப்படுகிற போது, ஆபத்துக் காலங்களில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிற தயாரிப்புகளின் குறிப்பிட்ட 'பிராண்ட்' களை சில சமயம் அடையாளப்படுத்துகிறது. குறிப்பிட்ட தயாரிப்புகளை இந்தக் கையேட்டில் சொல்வதால் அது செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் சர்வதேச கூட்டமைப்பு அத் தயாரிப்பினை ஏற்றுப் பரிந்துரை செய்வதாக ஒருபோதும் ஆகிவிடாது.

அட்டைப் புகைப்படம்: சர்வதேச கூட்டமைப்பு

இந்த வெளியீட்டைச் சாத்தியப்படுத்துவதற்கு உதவிசெய்துள்ள அனைவருக்கும் சிறப்பான நன்றி. குறிப்பாக ரெபெக்கா கபுரா, ஏஞ்ஜெலிகா கெஸ்லர் மற்றும் டானியெல் லான்டேன்.

Indian Red Cross Society

National Headquarters
1, Red Cross Road, New Delhi - 110001
Phones: +91 11 23716441/2/3
Fax: +91 11 23717454
Web site: www.indianredcross.org

2008

International Federation of Red Cross and
Red Crescent Societies

P.O. Box 372
CH-1211 Geneva 19
Switzerland
Telephone: +41 22 730 4222
Telefax: +41 22 733 0395
E-mail: secretariat@ifrc.org
Web site: www.ifrc.org




# ஆபத்துக்காலங்களில் வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் சேமித்து வைத்தல்

செஞ்சிலுவை/செம்பிறை அலுவலர் மற்றும் தன்னார்வப் பணியாளருக்கான ஒரு களப்பணிக் கையேடு

International Federation
of Red Cross and Red Crescent Societies

Indian Red Cross Society

# தலைமைச் செயலாளரின் மேசையிலிருந்து



குடிதண்ணீர் மற்றும் துப்புரவுச் சுகாதாரம், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தலையாய செயற்களமாக இருக்கிறது. அண்மை வருடங்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பினும், இந்தியாவில் பாதுகாப்பான குடிதண்ணீர் மற்றும் போதுமான துப்புரவுச் சுகாதாரத்திற்கான வாய்ப்பு பெரிய ஒரு தேவையாக இருக்கிறது மற்றும் இந்தத் தேவைகளுக்கு பதிலளிப்பதற்கு உகந்த இடத்தினில் செஞ்சிலுவை உள்ளது.

இந்திய செஞ்சிலுவைச் சங்கம் இந்த நாட்டின் மிகப் பெரிய மனிதாபிமான அமைப்பாகும். விபத்துக்களால் பாதிக்கப்பட்ட மக்களுடைய அவசரநிலைத் தேவைகளை கவனிப்பதுடன் கூட அவர்கள் புத்துணர்வு பெற்று எழுவதில் பின்பலமாக ஆதரவளிக்கிற தொண்டர்களின் வலிமைவாய்ந்த ஒரு வலையம் அதனிடம் உள்ளது. நமது ஊழியர்கள் மற்றும் தொண்டர்களின் உழைப்பினை நான் பாராட்டுகிறேன் மற்றும் உங்களுடைய உழைப்பினைத் தொடருமாறு கேட்டுக்கொள்கிறேன். நாம் ஒன்றுபட்டு, தற்சமயம் போதுமான துப்புரவுச் சுகாதாரம் அல்லது சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிதண்ணீர் இல்லாதவர்களின் வாழ்க்கையில் ஒரு உண்மையான வித்தியாசத்தை உண்டாக்க முடியும்.

இதன் உள்ளடக்கத்தினை நன்கு புரிந்துகொண்டு, மற்றும் தாம் பெறுகிற அறிவினை செயல்படுத்துவதன் வழியாக நாடு முழுவதிலுமுள்ள சமுதாயங்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரச் சூழலை மேலும் மேம்படுத்துவதைத் தொடர்ந்திட மாநில மற்றும் மாவட்டக் கிளைகளின் அனைத்து ஊழியர்கள் மற்றும் தொண்டர்களை நான் மிக வலிமையாக ஊக்கமூட்டுகிறேன். சமுதாய மட்டத்தில் பயிற்சி அளிக்கிற பொழுது ஒரு வள ஆதாரமாகவும் இந்தக் கையேடு பயன்படுத்தப்பட முடியும். இக்கையேட்டிலுள்ள வழிகாட்டுதலைப் பகிர்ந்துகொள்வதன் மூலம், சமுதாயங்களை வலிமை பெறச் செய்வதில் நேரடியான ஒரு பங்கினை ஆற்றுதல் மற்றும் செஞ்சிலுவையின் சேவையின் தாக்கத்தினை அதிகரித்தல் ஆகியவற்றை நீங்கள் செய்வீர்கள்.

2008 ல் முதல் பதிப்புகளைத் தயாரித்த **ஐஎஃப்ஆர்சி** யின் ஆரோக்கியம் மற்றும் சேவைக் குழுவினரின் ஆதரவு இல்லாதிருந்தால் இந்தப் பதிப்பு சாத்தியமாகியிருக்க முடியாது. இந்தியாவின் பன்முகத் தன்மையினைப் பிரதிபலிப்பதற்கு இந்தக் கையேடு ஆங்கிலத்திலிருந்து வங்காளி, ஹிந்தி மற்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உள்ளூர் சமுதாயங்களை அவை எதிர்கொள்கிற சவால்களுக்கு நிகராக எழச் செய்வதில் மேலும் அதிகமான பங்களிப்புச் செய்வதற்கு, இந்த மொழிப் பதிப்புகள் நமது செஞ்சிலுவையை அனுமதிக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**டாக்டர். எஸ்.பி. அகர்வால்**
தலைமைச் செயலாளர்

# உள்ளடக்கம்

**தண்ணீரின் தரம் மேல்நோட்டம்** .......... 4

**வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பான நீர் சேமித்து வைத்தல்** .......... 6

**வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்புக்கு வழிமுறைகள்** .......... 8
வடிகட்டுதல் .......... 8

கிருமி ஒழிப்பு .......... 9
கொதிக்க வைத்தல் .......... 10
சூரிய ஒளியின் மூலம் .......... 12
வேதியியல் கிருமி ஒழிப்பு .......... 14

தெளியவைத்தல் .......... 17
மூன்று பாத்திர வழிமுறை .......... 18
வேதியியல் தெளியவைத்தல் .......... 20

வடித்தெடுத்தல் .......... 22
உருளை வடிகட்டிகள் .......... 22
மணல் வடிகட்டிகள் .......... 23

**பாதுகாப்பான நீர் சேமித்து வைத்தல் மற்றும் கையாளுதல்** .......... 24

**வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பாக சேமித்து வைத்தல்-வீட்டு அளவில் பரப்புதல்** .......... 26

**வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பாக சேமித்து வைத்தல்-தீர்மானம் காட்சிமரம்** .......... 29

**உண்மை விவரங்களின் பக்கங்கள்** .......... 32
மூன்று பாத்திர வழிமுறை .......... 32
'வாட்டர் கார்டு'(Sûr'Eau) கொண்டு தண்ணீரை எப்படி சுத்திகரிப்பது .......... 34
குளோரின் மாத்திரைகள் கொண்டு தண்ணீரை எப்படி சுத்திகரிப்பது .......... 36
'வாட்டர்மேக்கர்' கொண்டு தண்ணீரை எப்படி சுத்திகரிப்பது .......... 38
'PUR' உறை கொண்டு தண்ணீரை எப்படி சுத்திகரிப்பது .......... 40

**மேலும் அதிகப்படி வளஆதாரங்கள்** .......... 42



# > தண்ணீரின் தரம் -மேல்நோட்டம்

## > தண்ணீரின் தரம் ஏன் முக்கியமானதாக இருக்க வேண்டும்?

மனிதர்களை ஆரோக்கியமானவர்களாய் வைத்திருக்க, குறிப்பாக ஒரு ஆபத்துக்காலத்தில், சுத்தமான தண்ணீர் ஒரு முக்கிய காரணியாக இருக்கிறது.

## > தண்ணீர் எப்படி மாசுபடுகிறது?

நீர்நிலைகளில், வீட்டில் அல்லது இடையிலுள்ள பயணத்தின் பொழுது தண்ணீர் மாசுபட முடியும்.

பாதுகாக்கப்படாத ஒரு நீர்நிலை, அசுத்தமான ஒரு பாத்திரம் அல்லது கழுவப்படாத கைகள் ஆகியவை, தண்ணீரை, பார்ப்பதற்கும் சுவைப்பதற்கும் சுத்தமானதாகத் தோன்றும் தண்ணீர் மனிதர்களை நோயாளிகளாக்கும்.

பின்வருவன உள்ளிட்ட பல வழிகள் மூலமாகவும் ஒரு நீர்நிலை மாசுபடமுடியும்:

- கசிகின்ற கழிவுத்தொட்டிகள் மற்றும் கழிவறைகள்.
- தரைமட்டத்தில் மாசுபட்ட நீரோட்டம் கிணறுகள் மற்றும் ஊற்றுக்களில் நுழைதல்.
- கழுவப்படாத கைகள் மற்றும்/அல்லது அசுத்தமான பாத்திரங்களில் தண்ணீர் சேகரித்தல்.
- அதே நீர்நிலைகளைக் கால்நடைகள் பயன்படுத்துவது.
- கிணற்றுக்குள் பொருட்கள் விழுதல்.

ஆயினும், தண்ணீர் சங்கிலித்தொடரில், நீர்நிலையின் தண்ணீர் முதற்கட்டம் மட்டுமேயாகும். ஒரு நீர்நிலையிலிருந்து சேகரிக்கப்பட்ட சுத்தமான தண்ணீர் கூட பாதுகாப்பற்ற சுகாதாரப் பழக்கங்களின் காரணமாக உபயோகத்திற்கு முன்பாக முக்கியமான கட்டங்களில் மாசுபட முடியும்:

- நீர் நிலையிலிருந்து வீட்டிற்குத் தண்ணீரை அசுத்தமான தண்ணீர்பாத்திரங்களில் கொண்டு செல்லுதல்.
- வீட்டினில் தண்ணீரை திறந்த மற்றும் அசுத்தமான பாத்திரங்களில் சேமித்து வைத்தல்.
- வீட்டினில் அசுத்தமான பாத்திரங்கள் அல்லது கைகளால் தண்ணீரைக் கையாளுதல்.



இந்தச் சங்கிலித்தொடரின் ஒவ்வொரு அடியும் தண்ணீர் மாசுபடுவதற்கு ஒரு வாய்ப்பினை அளிக்கிறது.

## > தண்ணீரின் தரத்தின் என்னென்ன தன்மைகளில் நாம் ஆர்வம் கொண்டிருக்கிறோம்?

தண்ணீரின் தரத்தினை மேம்படுத்துவதற்கு பல காரணங்கள் இருக்கக்கூடும். நோய்களை ஏற்படுத்தும் கிருமிகள் மற்றும் புல்லுருவிகள் போன்ற உயிர்களை நீக்குவது மிகவும் முக்கியமானதாகும். தண்ணீரை பார்ப்பதற்கும் சுவைப்பதற்கும் மற்றும் மனிதர்களை நோயுறச் செய்கிற கிருமிகளைச் சுமந்துகொண்டிருக்கக்கூடிய மண் போன்ற மிதக்கும் துகள்களையும் நீக்குவதற்கு நாம் விரும்பக்கூடும்.

## > தண்ணீரின் தரத்தை என்னென்ன தன்மைகள் இந்தக் கையேட்டில் உட்படுத்தப்படவில்லை?

விவசாயத்தில் பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகள் அல்லது இயற்கையில் உருவாகின்ற நஞ்சு ஆகியவை போன்ற சில பொருட்களைக் கொண்டிருந்தால், தண்ணீர் ஆரோக்கியத்திற்கு ஆபத்தானதாக இருக்க முடியும். அல்லது, இரும்புச்சுவையினது போல, குடிப்பதற்குப் பாதுகாப்பானதாய் இருக்கக்கூடுமென்றாலும் மேலும் நல்ல சுவையுள்ள ஆனால் அவர்களை நோயுறச் செய்கிறவேறு நீர்நிலைகளை மனிதர்கள் நாடிச்செல்கிற அளவுக்கு சுவை மிக மோசமாகி விடுகிறது.

இந்தப் பிரச்சினைகள் மீதான தகவல்களைப் பிற ஆதாரங்களில் காண முடியும் (பார்க்கவும் - மேலும் அதிகப்படி வள ஆதாரங்கள்).

## > தண்ணீர் மாசுபட்டிருக்கிறது என்று நாம் எப்படித் தெரிந்துகொள்வது?

தண்ணீரின் தரத்தினைச் சோதிப்பதற்குப் பல வழிகள் உள்ளன. அனைத்திற்கும் கருவிகள் மற்றும்/அல்லது வேதியியல் பொருட்கள் தேவைப்படுகின்றது. தண்ணீரின் தரச் சோதனை இந்தக் கையேட்டில் உட்படுத்தப்படவில்லை. மேலும் அதிகமான தகவல்களை மேலும் அதிகப்படி வள ஆதாரங்கள் பிரிவில் காணலாம்.

தண்ணீரின் தரச் சோதனை சாத்தியமில்லையெனில், நீர்நிலை மற்றும் பயன்படுத்துவோரின் நடத்தை ஆகியவற்றைக் கண்காணித்து மனிதர்களின் ஆரோக்கியத்திற்கு இருக்கும் ஆபத்துக்களை அடையாளம் காண முடியும்.

| | | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1 | ஒரு பம்ப் அல்லது நிலைக்குழாயிலிருந்து மனிதர்கள் தண்ணீர் சேகரித்துக் கொண்டிருக்கிறார்களா? | | |
| 2 | அந்தப் பம்ப் அல்லது தண்ணீர் முறைமை நல்ல நிலையில் உள்ளதா? | | |
| 3 | தண்ணீர் பார்ப்பதற்குச் சுத்தமாகத் தோன்றுகிறதா? | | |
| 4 | பம்ப்-ஐச் சுற்றியுள்ள பகுதி சுத்தமாக உள்ளதா? | | |
| 5 | மக்கள் பாதுகாப்பான தண்ணீர் சேமித்து வைத்தல் மற்றும் கையாளுதலைக் கடைப்பிடிக்கிறார்களா? | | |
| 6 | மக்கள் நல்ல சுகாதார நடத்தைகளைக் கடைப்பிடிக்கிறார்களா? | | |

இந்தக் கேள்விகளில் எதற்காவது ‘இல்லை’ என்பது பதிலாக இருப்பின், தண்ணீரின் தரத்தில் பிரச்சினை இருப்பதற்கு வலிமையான சாத்தியக்கூறு உள்ளது.

ஒரு ஆபத்துக் காலத்தில், நோய் விளைவிக்கும் கிருமிகளினால் மனிதர்கள் மேலும் அதிகமாகத் தாக்குதலுக்குள்ளாவார்கள். போதுமான அளவு வள ஆதாரங்கள் இருப்பின், நோய்கள் பரவுகிற ஆபத்தினைக் குறைப்பதற்கு, முன்னெச்சரிக்கையாக இருப்பதும் மற்றும் அந்தப்பிரிவினருக்கும் கூட சுத்தமான தண்ணீர் உதவுவதும் மிகவும் சிறந்ததாக இருக்கக்கூடும்.

# வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பான நீர் சேமித்து வைத்தல்

## > வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு என்பது என்ன?

வீட்டு அளவில் தண்ணீரின் தரத்தினை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படுகிற எந்த நடவடிக்கையும் வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு ஆகும்.

## > பாதுகாப்பான தண்ணீர் சேமித்து வைத்தல் என்பது என்ன?

மூடிகளுடன் கூடிய சுத்தமான பாத்திரங்களைப் பயன்படுத்துவது மற்றும் வீட்டில் தண்ணீர் சேகரிப்பு, இடமாற்றம் மற்றும் சேமிப்பு ஆகியவற்றின் பொழுது மாசுபடுதலைத் தடுக்கும் நல்ல சுகாதார நடத்தைகள் ஆகியவை பாதுகாப்பான தண்ணீர் சேமித்து வைத்தல் ஆகும்.

## > நாங்கள் ஏன் வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பான சேமிப்பினைப் பரப்புகிறோம்?



சர்வதேசக் கூட்டமைப்பு

ஒரு சுத்தமான நீர்நிலையிலிருந்து எடுக்கப்பட்டு ஒரு பாதுகாப்பான முறையினில் சேமித்து வைக்கப்பட்ட தண்ணீரைப் பயன்படுத்துவது எப்போதும் மிக நல்லது. ஆயினும் இது எப்போதும் சாத்தியமில்லை, குறிப்பாக ஒரு ஆபத்துக் காலத்தில், நீர்நிலையினை, அசுத்தமானதாகவும் பயன்படுத்த முடியாததாகவும் ஏதாவது செய்திருக்கக்கூடும். அல்லது, ஒரு சமூகத்திடம் சுத்தமான பாத்திரங்கள் அல்லது நல்ல சுகாதார நடத்தைகள் இல்லாதிருக்கக்கூடும்.

இந்தப் பிரச்சினைக்கு வீட்டு அளவில் தண்ணீரைச் சுத்திகரிப்பது ஒரு அணுகுமுறையாகும். பல சமயங்களில் இது நீர் நிலையை மேம்படுத்தமுடிகிறவரை மேற்கொள்ளப்படுகிற தாற்காலிக நடவடிக்கையாக இருக்கிறது. வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு நுட்பங்களை ஒரு குறுகிய கால மற்றும் அடிப்படைத் தொழில்நுட்பப் பயிற்சிக்குப் பிறகு குடும்பத்தின் எந்த உறுப்பினராலும் செய்ய முடியும்.

*வீட்டு உபயோகத் தண்ணீரின் தரத்தினை மேம்படுத்துவதற்கான முயற்சிகள், ஆரோக்கியத்தின் மீது மிகப் பெரிய பாதிப்பினை உண்டாக்க முடியும் மற்றும் ஒரு குறுகிய கால அவகாசத்திற்குள் பெரிய மக்கள் தொகையை சென்றடைய முடியும்.*

## > வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பான சேமித்து வைத்தல் எவ்வாறு செய்யப்படுகிறது?

வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்புக்குப் பல்வேறு வழிமுறைகளை இந்தக் கையேடு விவரிக்கிறது மற்றும் அவற்றின் பயன்பாட்டுக்கான அறிவுறுத்தல்களை உட்கொண்டுள்ளது.

ஒரு ஆபத்துக்கால எதிர்வினையின் ஒரு பகுதியாகப் பொருட்களைப் பெறுகிற மக்கள் அந்தப் பொருட்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறிவது மிகவும் முக்கியமாகும். வீட்டு உப்யோகத் தண்ணீர் சுத்திகரிப்பின் வெவ்வேறு தயாரிப்புகள் மற்றும் பல்வேறு அளவுகளில் வருகின்ற தயாரிப்புகளுக்கு வெவ்வேறு நடைமுறைகள் உள்ளன. விநியோகம் தொடங்கு முன்னர் அந்தச் சுத்திகரிப்பு தயாரிப்பு குறித்து பழக்கம் பெற்றுக்கொள்ளவும். நீங்களே அதனைச் சுயமாகப் பயன்படுத்திப் பார்க்கவும். மற்றும் அதனைப் பயன்படுத்துவது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ளாமல், எந்தப் பொருளையும், அது ஒரு வேதியியல் பொருளானாலும் அல்லது தகர டப்பாவாக இருந்தாலும் யாரும் பெறவில்லை என்று உறுதிசெய்துகொள்ளவும்.

இந்த தயாரிப்புக்களில் பலவற்றின் உயர்ந்த விலைமதிப்பு மற்றும் மாசுபட்ட தண்ணீரைக் குடிப்பது தொடர்பான ஆபத்துகளைக் கருத்தில் கொள்ளும்போது, விநியோகக் குழுவினருடன் ஒருங்கிணைந்த மற்றும் நெருக்கமான உடன்பாடு முக்கியமானதாகும்.

ஒரு ஆபத்துக்காலத்தில் பொருட்களின் விநியோகத்துடன் வீட்டு அளவில் தண்ணீரைப் பாதுகாப்பாகக் கையாளுதல் மற்றும் சேமித்து வைத்தல் பற்றிய சுகாதாரமுறைகளைப் பரப்பும் நடவடிக்கைகளை எவ்வாறு இணைப்பது என்பது பற்றிய அடிப்படை வழிகாட்டுதலையும் இந்தக் கையேடு உட்கொண்டுள்ளது.

## > வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு பாதுகாப்பானதா?

ஒவ்வொரு பிரிவிலும் குறிப்பிட்ட பாதுகாப்பு கவலைகள் உட்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாகச் சொன்னால், இக் கையேட்டில் விவரிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் மற்றும் தயாரிப்புக்கள் பாதுகாப்பானவை. ஆயினும், வேதியியல் பொருட்கள் பயன்படுத்தப்படும் பொழுது, குறிப்பாகக் குழந்தைகளுடன், கவனமாக இருக்கவேண்டும்.

## > எவ்வளவு தண்ணீர் சுத்திகரிக்கப்படவேண்டும்?

*தேவை எவ்வளவோ, அவ்வளவு மட்டும்.*
ஆபத்துக் காலங்களில் பல சமயங்களிலும் சுத்தமான தண்ணீர் கிடைப்பது அரிதாக இருக்கிறது, மற்றும் இந்தக் கையேட்டில் கூறப்பட்டுள்ள சுத்திகரிப்பு வழிமுறைகள் அனைத்தும் நேரம், பணம் அல்லது இவையிரண்டு வகையிலும் செலவு ஏற்படுத்தக்கூடியவை. சுத்திகரிக்கப்படவேண்டிய தண்ணீரின் குறைந்தபட்ச அளவென்பது, குடிப்பதற்கு மற்றும் சமைக்கப்படாத உணவு தயாரிப்பதற்குத் தேவைப்படுகிற அளவாகும். வழக்கமாக நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு சுமார் 5 லிட்டர் தேவைப்படுகிறது; ஆனால் வானிலை மற்றும் மக்கட்தொகை ஆகியவற்றைப் பொறுத்து இது மாறுபடக்கூடும்.

சுத்திகரிக்கப்படாத தண்ணீர் ஓரளவுக்குத் தெளிவாகக் காணப்படுகிறதெனில், குளிப்பது அல்லது சலவை போன்ற வீட்டின் பிற நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுவதற்கு முன்னதாக அதனைச் சுத்திகரிப்பது வழக்கமாகத் தேவையில்லை.

## > சுத்திகரிப்பு வழிமுறைகள் யாவை?

இந்தக் கையேடு மூன்று வகையான தண்ணீர் சுத்திகரிப்பினைப் பார்வையிடும்:

**கிருமிஒழிப்பு -** தண்ணீர் நோய் விளைவிக்கும் கிருமிகள் இருக்கிறதென்பதை உறுதி செய்தல். வேதியியல் பொருட்கள், வெப்பம் அல்லது சூரிய ஒளியினால் கூட இது செய்யப்படக்கூடும்.

**தெளியவைத்தல் -** நேரம் செல்லச் செல்ல தண்ணீர்ப் பாத்திரத்தின் அடிப்பகுதியில் மண் தேங்கி நிற்க விடுதல்.

**வடித்தெடுத்தல் -** தண்ணீரை வெண்களிமண் அல்லது மணல் போன்ற பொருளின் ஊடாகச் செலுத்தி மண்ணை நீக்குதல்.

## > சுத்திகரிப்பு முறையினை நாம் எவ்வாறு தேர்ந்தெடுப்பது?

முறையின் தேர்வு, ஆபத்துக்காலத்தின் இடச்சூழல் மற்றும் தன்மையினைச் சார்ந்து இருக்கும். ஒருவேளை இதற்கு ஒரு சரியான பதில் அல்லது ஒரு சரியான தீர்வு இல்லாதிருக்கக்கூடும்.

சில சமயத்தில் எது கிடைக்கிறதோ அது மட்டுமே தேர்வாக இருக்கிறது.மிக முக்கியமாக, அந்த முறை அல்லது தயாரிப்பினைப் பயன்படுத்துகிற மக்கள் அதனைப் பயன்படுத்த விரும்பிடல் வேண்டும்.

8

# வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு முறைகள்

## வடிகட்டுதல்

வடிகட்டுதல் என்பது, சரியாகச் செய்யப்பட்டால், இந்தக் கையேட்டில் கூறப்பட்டிருக்கும் அனைத்து வழிமுறைகளின் விளைவுத்திறத்தினையும் மேம்படுத்துகிற ஒரு முக்கியமான முதல் படியாகும்.

பல சமயங்களில், கலங்கிய அசுத்தமாகக் காணப்படும் தண்ணீரை ஒரு மெல்லிய சுத்தமான பருத்தித் துணித் துண்டின் மூலமாக ஊற்றுவது தண்ணீரிலுள்ள மிதக்கும் திடப்பொருட்கள் மற்றும் புழுக்களின் லார்வா ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட அளவினை நீக்கிவிடும்.

அந்தத் துணி போதுமானதா எனக் கண்டறிவதற்கு தண்ணீரை வடிகட்டுவதற்கு அதனைப் பயன்படுத்துவது ஒரு எளிய சோதனையாகும். அந்தத் துணியின் மூலம் மண் ஊடுருவிச்செல்லவில்லையெனில் அது சரியாக வேலை செய்கிறது. ஒரு பருத்தித் துணி மிகச் சிறப்பாகப் பயன்படும் மற்றும் அந்தத் துணியின் மூலம் உங்களால் மறுபுறம் பார்க்க இயலக்கூடாது. ஆனால், தண்ணீரை வடிகட்டுவதற்கு மிக அதிக நேரம் எடுத்துக்கொள்கிற மாதிரி அந்தத் துணி கனமானதாக இருக்கக் கூடாது.

பயன்பாடுகளுக்கிடையில் அந்தத் துணியினைத் துவைப்பது வடிகட்டுதலை விளைவுமிக்கதாக்கும்

ஒரு மாசுபடுத்தப்பட்ட நீர்நிலையின் தண்ணீரை வடிகட்டுதல் மட்டுமே குடிப்பதற்கு முழுமையான பாதுகாப்பானதாக ஆக்குவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் அது வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பினை மேலும் எளிதாக்குகிறது.



# > கிருமி ஒழிப்பு

தண்ணீர் தெளிவாக இருக்கிறது, ஆனால் மாசுபட்டிருப்பதற்கு வாய்ப்புள்ளதெனில், அது கிருமிஒழிப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

மூன்று வகை கிருமிஒழிப்பு இந்தக்கையேட்டில் உட்படுத்தப்படும்.

- கொதிக்கவைத்தல்
- சூரியஒளி
- வேதியியல் பொருட்கள்




கிருமிஒழிப்பு பலசமயங்களில் தண்ணீரின் சுவையினைப் பாதிக்கக்கூடும்.

- கொதிக்கவைத்தல் தண்ணீரைச் சுவையற்றதாக்கிவிடும்.
- சூரியஒளி தண்ணீரைச் சூடாக்கும்.
- வேதியியல் பொருட்கள் ஒரு கெட்ட சுவையினை விட்டுச்செல்ல முடியும்.

இந்தப்பிரச்சினைகள் அனைத்தும் எளிமையான முறைகளின் மூலம் தீர்க்கப்பட முடியும். இந்த முறைகளைப் பயன்படுத்துகிற மக்கள் சுத்தமான தண்ணீரை விட்டுவிட்டு பாதுகாப்பற்ற நீர்நிலைகளுக்குச் செல்லாமலிருத்தல் அல்லது அவர்கள் சேகரிக்கும் தண்ணீரைச் சுத்திகரிப்பதை நிறுத்தி விடாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு அவர்களிடம் இது பற்றிப் பேசவேண்டியது முக்கியமானதாகும்.

## > கொதிக்கவைத்தல்

கொதிக்கவைத்தல் என்பது தண்ணீரைச் சுத்திகரிப்பதில் பாரம்பரியமான ஒரு முறையாகும். இது சரியாகச் செய்யப்பட்டால், வேறு மாற்றுத் தேர்வுகளெதுவும் இல்லாத ஒரு மக்கள் சமூகத்திற்கு பாதுகாப்பான தண்ணீரை வழங்க முடியும்.

கொதிக்கவைத்தல் நேர்மறையான மற்றும் எதிர்மறையான தன்மைகளைக் கொண்டிருக்கிறது.

- ▲ நோய் விளைவிக்கும் கிருமிகள் அனைத்தையும் கொதிக்கவைத்தல் அழித்து விடும்.
- ▲ கொதிக்கவைத்தல் என்பது மக்கள் தாங்களே செய்ய முடிகிற ஒன்று.
- ● ஒரு லிட்டர் தண்ணீரை ஒரு நிமிடம் கொதிக்கவைப்பதற்கு ஒரு கிலோகிராம் விறகு செலவாகிறது. கொதிக்கவைத்தல் தண்ணீரின் கலங்கிய தோற்றத்தைக் குறைப்பதில்லை.
- ● கொதிக்கவைத்தலில் எஞ்சித் தேங்கும் விளைவு இல்லையாதலால் தவறான சேமித்து வைத்தல் மறு-மாசுபடலுக்கு இட்டுச்செல்ல முடியும்.
- ● கொதிக்கவைக்கபட்ட தண்ணீர் பாதுகாப்பாகச் சேமித்துவைக்கப்படவேண்டும் மற்றும் ஒரு சில தினங்களுக்குள்ளாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.



போதுமான அளவு சூடு இருந்தால் மட்டுமே கொதிக்கவைத்தல் பயனுள்ளதாக இருக்கிறது. வெறும் ஆவிபறக்கிற தண்ணீர் கொதிக்கவைக்கப்பட்டதல்ல.

⚠ கொதிக்கவைத்தல் வேலை செய்வதற்கு, ***தண்ணீர் சுருள்கிற, நுரைக்கிற கொதிநிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.***



## > எவ்வளவு நேரம் நீர் கொதிக்கவைக்க வேண்டும்?

கொதிநிலை தாழ்ந்த பகுதிகளில் **ஒரு நிமிடம் சுருள்கிற, நுரைக்கிற கொதிநிலை**.

கொதிநிலை உயர்வான பகுதிகளில் **மூன்று நிமிடங்கள் சுருள்கிற, நுரைக்கிற கொதிநிலை**.



உதவித்தகவல்

கொதிக்கவைத்தல் தண்ணீரைச் சுவையற்றதாக்கிவிடும். ஆயினும், தண்ணீரை ஒரு பாட்டிலிலிட்டு குலுக்குவதன் மூலம் அல்லது கொதிக்கவைத்த ஒவ்வொரு லிட்டர் தண்ணீரிலும் ஒரு சிட்டிகை உப்பு சேர்ப்பதன் மூலம் இதனைச் சரிசெய்து விட முடியும்.



## > சூரிய ஒளியினால் கிருமி ஒழிப்பு

தண்ணீரைச் சூரிய ஒளிக்கு வெளிப்படுத்துவது நோய் விளைவிக்கும் கிருமிகளில் மிகப்பெரும்பான்மையானவற்றை அழித்துவிடும். உயர்ந்த வெப்ப நிலையினில் இது மேலும் விளைவுப்பயனுள்ளதாக இருக்கிறது(தண்ணீரின் வெப்ப நிலை 50ºC-க்கு மிக அதிகமாக உயர்ந்திடத் தேவையில்லையென்றாலும் கூட).

ப்ளாஸ்டிக் அல்லது கண்ணாடி பாட்டில்களில் தண்ணீரைச் சூரியவெப்பத்திற்கு வெளிப்படுத்துவது தண்ணீரைச் சுத்திகரிப்பதற்கு ஒரு சுலபமான முறையாகும். அதிக வெப்ப மண்டலப் பகுதிகளில், உச்சிபொழுதினை மையப்படுத்தி சுமார் ஐந்து மணி நேரம் என்பது பாதுகாப்பான வெளிப்படுத்தும் கால வரையறையாகும்.

தண்ணீர் கலங்கலாக இருக்கும்பொழுது பாட்டிலை சூரிய வெப்பத்திற்கு வெளிப்படுத்துகிற காலஅளவு இரட்டிப்பாக்குதல் தேவையாகும்(ஒரு நாளைக்கு மாறாக இரண்டு நாட்கள்). வெயிலான வானிலை இல்லையென்றாலும்(மழைக்காலம்) வெளிப்படுத்துகிற நேரத்தை அதிகரிக்க வேண்டும்.

## > சூரிய ஒளியின் மூலம் கிருமி ஒழிப்பை நாம் எப்படிப் பயன்படுத்துவது?

SODIS முறைமை என்றும் அறியப்படுகிற இந்த முறையானது, அவற்றை நேரடியான சூரிய ஒளியில் வைப்பதன் மூலம் தண்ணீரின் வெப்பநிலையினை அதிகரிப்பதற்கு தெளிவான **ப்ளாஸ்டிக்** அல்லது **கண்ணாடி** பாட்டில்களைப் பயன்படுத்துகிறது.

மேலும் அதிகமான விளைவுப்பயனுக்கு அந்த பாட்டிலை வளைவுகளுடனான இரும்புக் கூரையின் மீது வைக்கவும்.

பாட்டில் கிடைக்கவில்லையெனில் தண்ணீரை ஒரு சுத்தமான மற்றும் தெளிவான ப்ளாஸ்டிக் உறையிலும் தண்ணீரைப் பிடித்து வைக்க முடியும்.



உதவித்தகவல்

இச்செயல்பாட்டினை துரிதப்படுத்துவதற்கு, பாட்டிலை முக்கால் பாகம் நிறைக்கவும் மற்றும் வன்மையாகக் குலுக்கவும். பிறகு பாட்டிலை நிறைக்கவும் மற்றும் சூரிய ஒளிக்கு வெளிப்படுத்தவும். மேலும் வெளிப்படுத்தும் பொழுது அவ்வப்போது குலுக்குவதும் உதவியாக இருக்கும்.



உதவித்தகவல்

வெதுவெதுப்பான சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரைக் குடிப்பதற்கு மக்கள் விரும்புவதற்கு வாய்ப்பில்லை. அதனைக் குளிர விடுவதற்கு அவர்களை ஊக்குவிக்கவும்.

சூரிய ஒளியின் மூலம் கிருமி ஒழிப்பு நேர்மறையான மற்றும் எதிர்மறையான தன்மைகளைக் கொண்டிருக்கிறது.

- ▲ சூரிய வெப்பத்திற்குப் போதுமான நேரம் வெளிப்படுத்தப்பட்டால், சூரிய ஒளியின் மூலம் கிருமி ஒழிப்பு, நோய் விளைவிக்கும் கிருமிகளில் மிகப்பெரும்பான்மயானவற்றை அழித்துவிடும்.
- ▲ சூரிய ஒளியின் மூலம் கிருமி ஒழிப்பு என்பது, பரவலாகக் கிடைக்கிற பொருள்களைக் கொண்டு(தெளிவான பாட்டில்கள் அல்லது தெளிவான ப்ளாஸ்டிக் உறைகள்), மக்கள் தாமே செய்ய முடிகிற ஒன்றாகும்.
- ● சூரிய ஒளியின் மூலம் கிருமி ஒழிப்பில் எஞ்சித் தேங்கும் விளைவு இல்லையாதலால் தவறான சேமித்து வைத்தல் மறு-மாசுபடுதலுக்கு இட்டுச்செல்ல முடியும். சூரிய ஒளியின் மூலம் கிருமி ஒழிப்பு செய்யப்பட்ட தண்ணீர் பாதுகாப்பாகச் சேமித்துவைக்கப்படவேண்டும் மற்றும் ஒரு சில தினங்களுக்குள்ளாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.
- ● சூரிய ஒளியின் மூலம் கிருமி ஒழிப்பு, மற்ற முறைகளைக் காட்டிலும் அதிக நேரம் எடுத்துக்கொள்கிறது மற்றும் வெயிலான வானிலை தேவைப்படுகிறது.

## > வேதியியல் கிருமி ஒழிப்பு



தண்ணீர்க் கிருமி ஒழிப்புச் செய்யும் திறன் வாய்ந்த பல வேதியியல் பொருட்கள் உள்ளன. பலசமயங்களிலும் இந்த வேதியியல் பொருட்கள் அவற்றின் பயன் விளைவுத்திறம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் மாறுபடுகின்றன.

சர்வதேசக் கூட்டமைப்பு, ஆபத்துக் காலங்களில் வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பிற்கு மிகப் பொதுவாக குளோரின் மாத்திரைகளைப் பயன்படுத்துகிறது.

## > வேதியியல் கிருமி ஒழிப்பு முறையினை நாம் எவ்வாறு பயன்படுத்துவது?

**குளோரின் மாத்திரையால் தண்ணீரைச் சுத்தப்படுத்துவது எப்படி**




## வாட்டர் கார்டு திரவம்

வாட்டர் கார்டு (Sûr'Eau என்றும் அறியப்படுவது) என்பது திரவ வடிவ குளோரின் ஆகும். அது மாத்திரையைப் போன்ற அதே விளைவுத்திறம் உடையதாயிருக்கிறது.

## வாட்டர் கார்டு (Sûr'Eau) திரவம் கொண்டு தண்ணீரைச் சுத்திகரிப்பது எப்படி




உங்களுடைய கைகளை, தண்ணீர் மற்றும் சோப்பு அல்லது சாம்பல் கொண்டு கழுவவும்

உங்கள் தண்ணீர் தெளிவாக இருக்கிறதா?

20 லிட்டர் தண்ணீருக்கு 1 காப்ஸ்யூல்களைச் சேர்க்கவும். பாத்திரத்தை மூடவும்.

30 நிமிடங்கள் காத்திருக்கவும்.

இப்பொழுது தண்ணீர் தயார்.

உங்கள் தண்ணீர் அழுக்காகக் காணப்படுகிறதா?

தண்ணீரினை துணியின் மூலம் வடிகட்டவும்.

20 லிட்டர் தண்ணீருக்கு 2 காப்ஸ்யூல்களைச் சேர்க்கவும். பாத்திரத்தை மூடவும்.

30 நிமிடங்கள் காத்திருக்கவும்.

இப்பொழுது தண்ணீர் தயார்.

வேதியியல் பொருட்களுடன் பணியாற்றும்போது எப்பொழுதும் கவனமாக இருக்க வேண்டும். வேதியியல் பொருட்கள் கண்களில் படுவதற்கு அனுமதிக்காதீர்கள். வேதியியல் பொருட்கள், குழந்தைகளின் கைகளுக்கு எட்டாத ஈரமற்றுலர்ந்த நேரடியாக சூரிய ஒளி படாத இடத்தில் சேமித்து வைக்கப்பட வேண்டும்.

இந்தத் தயாரிப்புக்களின் உறைகளின் மீது அறிவுறுத்தல்கள் உள்ளன. ஆயினும், அந்த அறிவுறுத்தல்கள், மக்கள் பேசுகிற மொழியினில் இல்லாதிருக்கக்கூடும் அல்லது அவர்கள் படிக்க இயலாதிருக்கக்கூடும்.

வேதியியல் பொருட்களைப் பெறும் மக்கள் அனைவரும் அவற்றைப் பயன்படுத்துவதற்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர் என்பதை உறுதி செய்யவும். மேலும் விபரங்களுக்கு, வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் தண்ணீரைப் பாதுகாப்பாகக் கையாளுதல் மற்றும் சேமித்து வைத்தல்-பிரிவைப் பார்க்கவும். தரக்கட்டுப்பாட்டுக் கவனங்கள் மற்றும் செறிவுகளின் விரிவான பரப்பெல்லையின் காரணமாக, வேறு பிற தேர்வுகள் கிடைக்கவில்லை என்றால் அல்லாமல், சலவை வெளுப்பான் போன்ற பொதுவான வீட்டு உபயோக வேதியியல் பொருட்கள் வேதியியல் கிருமி ஒழிப்பானாகப் பயன்படுத்தப்படக்கூடாது மற்றும் கவனமிக்க பயிற்சி மற்றும் கண்காணிப்பு நடத்தப்படவேண்டும்.







**உதவித்தகவல்** உதவித்தகவல் அசுத்தமான, அல்லது கலங்கிய தண்ணீருடன் பயன்படுத்தப்படும் பொழுது வேதியியல் கிருமி ஒழிப்பு அத்தனை விளைவுத்திறம் வாய்ந்ததல்ல. தண்ணீர் அசுத்தமாகவும் கலங்கலாகவும் தோற்றமளித்தால், இரட்டிப்பு அளவு வேதியியல் பொருளைப் பயன்படுத்தவும்.

உதவித்தகவல்

வேதியியல் கிருமி ஒழிப்பு, சிறப்பாக ஒரு இரட்டிப்பு அளவு, மக்கள் விரும்பாத ஒரு சுவையை ஏற்படுத்தி விட முடியும். இது அவர்களைத் தண்ணீர் சுத்திகரிப்பினை நிறுத்திவிடச் செய்ய முடியும். சரியான அளவு வேதியியல் பொருள் உபயோகிப்பதன் மூலம் மற்றும் தண்ணீரை ஒரு பாட்டிலிலிட்டுக் குலுக்கிக் காற்றுக் கொள்ளடக்கத்தினை அதிகரிப்பதன் மூலமும் வேதியியல் பொருளின் சுவைப் பிரச்சினையை நீக்கிவிட முடியும்.

உதவித்தகவல்

அந்தத் தயாரிப்பினைப் பற்றி மக்களிடம் பேசவும். அது பயன்படுத்துவதற்கு எளிதாக இருக்கிறதா? சுவை எப்படி இருக்கிறது? வேறு ஒரு தயாரிப்பு தேவைப்படக்கூடும்(அடுத்த பிரிவைப் பார்க்க).

உதவித்தகவல்

ஒரு பாத்திரத்தைத் திறந்து வைப்பது மற்றும் அதனை வெப்பத்திற்கு வெளிப்படுத்துவது (உதாரணத்திற்கு நேரடிச் சூரிய ஒளி) மாசுபடுதலுக்கு எதிராகப் பாதுகாக்கும் அந்த வேதியியல் பொருளின் திறனைக் குறைத்துவிடும். சாத்தியமானபொழுதெல்லாம் தண்ணீரை மூடி வைக்கவும் மற்றும் நேரடிச் சூரிய ஒளி படாமல் வைக்கவும் மக்களை ஊக்குவிக்கவும்.

வேதியியல் கிருமி ஒழிப்பு நேர்மறையான மற்றும் எதிர்மறையான தன்மைகளைக் கொண்டிருக்கிறது.

- ▲ இந்தத் தயாரிப்புக்கள் பயன்படுத்துவதற்கு எளிமையானவை மற்றும் பாதுகாப்பானவை.
- ▲ கிருமி ஒழிப்பின் எஞ்சித் தேங்கும் விளைவு, சுத்திகரிப்புக்குப் பின்னர் ஏற்படும் மாசுபடுதலுக்கு எதிராகச் சிறிது பாதுகாப்பைத் தருகிறது.
- ● இந்த தயாரிப்புக்கள் சமூகத்திற்கு வெளியிலிருந்து கொண்டு வரப்பட வேண்டும்; இது உள்ளூர் வள ஆதாரங்கள் கொண்டு அவர்கள் செய்யக்கூடிய ஒன்று அல்ல.
- ● நோய் விளைவிக்கும் கிருமிகள் எல்லாவற்றையும் வேதியியல் கிருமி ஒழிப்பு களைந்து விடாது. எல்லா ஆபத்துக்களும் நீக்கப்பட்டிருப்பதை உறுதி செய்திட, வேதியியல் கிருமி ஒழிப்புக்கு முன்னதாக தண்ணீரை வடிகட்டுதல் வேண்டும்.

# > வடித்தெடுத்தல்

தண்ணீர் கலங்கியிருப்பின், அதற்குத் தெளிவதற்கு நேரம் கொடுத்தல் அல்லது வேதியியல் பொருட்களைச் சேர்த்தல் ஆகியவை மண்ணை பாத்திரத்தின் அடிப்பாகத்தில் விழச்செய்து தண்ணீரைத் தெளிவாக்கிட முடியும். ஒரு துணியின் மூலம் தண்ணீரை வடிகட்டுதல் இச்செயல்பாட்டினை மேலும் விளைவுப்பயனுடையதாக்க முடியும்.



**குறிப்பு:** வடித்தெடுத்தல் மூலம் **தெளிவாக்கப்பட்ட** தண்ணீர் **சுத்தமானதல்ல**. நோய் விளைவிக்கும் கிருமிகளைக் களைந்திட அதற்கு இன்னும் கிருமி ஒழிப்பு தேவைப்படுகிறது. ஆனால் அசுத்தமான தண்ணீரைத் தெளிவடையச் செய்வது கிருமி ஒழிப்பினை மேலும் விளைவுப்பயன் உடையதாக்கும்.

## மூன்று பாத்திர வழிமுறை

பாத்திரங்களில் தண்ணீரைச் சேமித்து வைத்து, மண்ணை அடிப்பாகத்தில் சென்று தேங்க அனுமதித்து மற்றும் சுத்தமான தண்ணீரை வேறு பாத்திரங்களுக்கு மாற்றுவதன் மூலம் இந்த மூன்று பாத்திர முறையானது தண்ணீரிலுள்ள மண் மற்றும் நோய் விளைவிக்கும் கிருமிகளைக் குறைக்கிறது.

## மூன்று பாத்திர வழிமுறையை நாம் எப்படிப் பயன்படுத்துவது?

### மூன்று பாத்திர வழிமுறை




**ஒவ்வொரு நாளும் வீட்டிற்குப் புதிய தண்ணீர் கொண்டுவரப்படும் பொழுது:**

- **A** நீர்நிலையிலிருந்து சேகரிக்கப்பட்ட தண்ணீரை பாத்திரம் 1-க்குள் ஊற்றவும். சாத்தியமெனில், ஒரு துணி மூலமாக வடிகட்டவும்.
- **B** பாத்திரம் 1-ல் சேமித்து வைத்துள்ள தண்ணீரை மெதுவாக பாத்திரம் 2-க்குள் ஊற்றவும்.
- **C** பாத்திரம் 1-ஐச் சுத்தம் செய்யவும்.
- **D** பாத்திரம் 2-ல் சேமித்து வைத்துள்ள தண்ணீரை மெதுவாக பாத்திரம் 3-க்குள் ஊற்றவும்.
- **E** பாத்திரம் 2-ஐச் சுத்தம் செய்யவும்
- **F** பாத்திரம் 3-லிருந்து தண்ணீர் குடிக்கவும்.

தண்ணீர் தெளிவதற்கு ஒரு நாள் விடவும் மற்றும் பிறகு இந்தச் செய்முறையினைத் திரும்பச் செய்யவும்.

பாத்திரம் 3-லிருந்து மட்டும் தண்ணீர் குடிக்கவும். இந்தத் தண்ணீர் குறைந்தது 2 நாட்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது மற்றும் தரம் மேம்பட்டுள்ளது. இந்தப் பாத்திரம் அவ்வப்போது சுத்தப்படுத்தப்படும் மற்றும் கொதிக்கிற தண்ணீரினால் வேகவைக்கப்பட்டு கிருமிநீக்கம் செய்யப்படக்கூடும்.

ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொன்றிற்குத் தண்ணீரை வடிப்பதற்கு எளிதில் வளையக்கூடிய குழாய்களைப் பயன்படுத்துவது, ஊற்றுவதை விடக் குறைவாகத் தண்ணீரைக் கலக்குகிறது.



**உதவித்தகவல்**

பாத்திரங்களுக்குள் ஊற்றும்பொழுது வடிகட்டும் துணி ஒன்றைப் பயன்படுத்தி இந்த முறையினை மேம்படுத்த முடியும்.

உதவித்தகவல்

மூன்று பாத்திர முறை என்பது, பிற முறைகளைப் பெருமளவில் விநியோகம் செய்வது சாத்தியமாகிற வரையினில் அல்லது நீர் நிலையின் தரம் மேம்படுத்தப்படுகிற வரையினில் ஒரு ஆபத்துக்காலத்தில் மேற்கொள்ள முடிகிற ஒரு நல்ல இடைக்கால நடவடிக்கையாகும்.

உதவித்தகவல்

ஒரு ஆபத்துக்காலத்தில், மக்களிடம் மூன்று பாத்திரங்கள் இல்லாதிருக்கக்கூடும். மேலே விவரிக்கப்பட்ட முறையினை விட குறைந்த விளைவுப்பயனுடையதாக இருக்க வாய்ப்புள்ள போதிலும், மூன்றுக்குப் பதிலாக இரண்டு பாத்திரங்களை உபயோகிக்க முடியும். மண் அடிப்பாகத்தில் தேங்கிநிற்பதற்கும் மற்றும் நோய் விளைவிக்கும் கிருமிகள் சாவதற்கு மேலும் அதிகமான நேரம் அனுமதிக்க வேண்டும்.

மூன்று பாத்திர வழிமுறையானது நேர்மறையான மற்றும் எதிர்மறையான தன்மைகளைக் கொண்டிருக்கிறது.

- ▲ மூன்று பாத்திர வழிமுறை தண்ணீரில் மண் மற்றும் நோய் விளைவிக்கும் கிருமிகளை பெருமளவு குறைக்கிறது.
- ▲ இந்த வழிமுறை, குறைந்த செலவு, எளிதாகப் பயன்படுத்தமுடிவது மற்றும் மக்கள் உள்ளூர் வள ஆதாரங்களில் தாங்களே செய்ய முடிவதாயிருக்கிறது.
- ● நோய் விளைவிக்கும் கிருமிகளை இந்த வழிமுறை குறைக்கிறது, ஆனால் முழுமையாக நீக்குவதில்லை. அனைத்து நோய் ஆபத்தினையும் முழுமையாக நீக்குவதற்கு, கொதிக்கவைத்தல், வேதியியல் பொருட்கள் அல்லது சூரிய ஒளியினால் கிருமி ஒழிப்பு இன்னும் தேவைப்படுகிறது.

## > வேதியியல் வடித்தெடுத்தல்

வேதியியல் வடித்தெடுத்தல் என்பது தண்ணீரிலிருந்து மண்ணை நீக்குவதை துரிதப்படுத்துவதற்கு வேதியியல் பொருட்களைப் பயன்படுத்துவதாகும்.

PUR மற்றும் வாட்டர்மேக்கர் ஆகிய இரண்டும் ஆபத்துக் காலங்களில் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் கூட்டமைப்பினால் மிகவும் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிற இரண்டு வேதியியல் வடித்தெடுத்தல் தயாரிப்புக்களாகும்.




20 லிட்டருக்கு 5 **கிராம்.**




10 லிட்டருக்கு 2.5 **கிராம்.**




10 லிட்டருக்கு 4 **கிராம்.**

இவை தண்ணீரிலிருந்து மண்ணை நீக்குவதனாலும் மற்றும் கிருமி ஒழிப்புச் செய்வதாலும் இந்த வேதியியல் பொருட்கள் பயனுள்ளவை; சிறப்பாக, வெள்ளம் பாதிக்கும் பொழுது. ஆபத்துக்காலங்களில் இரண்டும் வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்புக்கு உகந்தவை மற்றும் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் கூட்டமைப்பு ஒரு தயாரிப்புக்கு எதிராக இன்னொன்றை பரிந்துரைப்பதில்லை.

## > இது எப்படி வேலை செய்கிறது?

இந்தத் தயாரிப்புக்கள் இரண்டு வேதியியல் பொருட்களைக் கொண்டுள்ளன. ஒரு வேதியியல் பொருள், ஒரு பசை போல இயங்கி சிறு துகள்களை ஒன்றாக இணைந்துகொள்ளச் செய்கின்றது. இதனால், ஃப்லாக் என அழைக்கப்படும் மேலும் பெரிதான கற்றைகள் உருவாக்கப்பட்டு, அவை மேலும் துரிதமாகப் பாத்திரத்தின் அடிப்பகுதிக்கு வீழ்கின்றன.



பிறகு இன்னொரு வேதியியல் பொருள், இந்தக் கையேட்டில் முன்பு விவரிக்கப்பட்ட வேதியியல் கிருமி ஒழிப்பு போலவே அந்த தெளிந்த தண்ணீரினை கிருமி ஒழிப்புச் செய்கின்றது.

## > அவை இரண்டுமடங்கு வேலை செய்கின்றனவெனில், நாம் எப்போதும் இந்தத் தயாரிப்புக்களைப் பயன்படுத்தினால் என்ன?

இந்தத் தயாரிப்புக்கள் மேலும் அதிகமான விலையுள்ளவை மற்றும் பிற முறைகளை விடப் பயன்படுத்துவதற்குச் சிரமமானவை. தண்ணீர் 1) தெளிவாக அல்லது சிறிது மட்டுமே கலங்கலாக இருக்கிறதென்றால் மற்றும் 2) வேதியியல் கிருமி ஒழிப்பு கிடைக்கிறதென்றால், அப்போது வேதியியல் வடித்தெடுத்தலைப் பயன்படுத்தாதீர்கள்.

## > வேதியியல் வடித்தெடுத்தலை நாம் எப்படிப் பயன்படுத்துவது?


நீர் நிலை


வேதியியல் பொருள் சேர்க்கப்பட்டபின் கற்றைகள் உருவாக்கம்


முழுமையாகக் கலக்கிய பிறகு கற்றைகள் உருவாக்கம்


ஒரு சுத்தமான பருத்தி வடிப்பான் மூலமாகத் தண்ணீரை ஊற்றுதல்


சேமித்துவைப்பதற்கு மற்றும் பயன்பாட்டிற்கு சுத்தமான தண்ணீர் தயார்

**உதவித்தகவல்**

செயல் முறை விளக்கங்களின் போது தெளிவான வாளிகளைப் பயன்படுத்துவது, தயாரிப்புகள் வேலை செய்வதை குழுக்கள் பார்ப்பதற்கு அனுமதிக்கிறது. ஆனால் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்வதற்கு ஏதுவாக குழுக்களைச் சிறியவையாக வைத்துக்கொள்ளுங்கள்!

**உதவித்தகவல்**

பாத்திரங்களில் ஊற்றும்பொழுது ஒரு வடிகட்டும் துணியைப் பயன்படுத்தி இந்த முறையை மேம்படுத்திட முடியும்.

ஒரு PUR உறை 10 லிட்டர் தண்ணீரைச் சுத்திகரிக்கிறது. வேறுபட்ட அளவு தண்ணீரைச் சுத்திகரிக்கிற வேற்பட்ட அளவுள்ள பாக்கெட்டுகளில் வாட்டர்மேக்கர் கிடைக்கிறது. அதனைப் பயன்படுத்துவது எப்படியென மக்களுக்குக் கற்பிப்பதற்கு முன், உறையின் மீதுள்ள அறிவுறுத்தல்களைச் சரிபார்க்கவும்.

வேதியியல் வடித்தெடுத்தல் முறையானது நேர்மறையான மற்றும் எதிர்மறையான தன்மைகளைக் கொண்டிருக்கிறது.

- ▲ இந்தத் தயாரிப்புக்கள், கலங்கலான தண்ணீரைக் குடிப்பதற்குப் பாதுகாப்பானதாகச் செய்யமுடியும்.
- ▲ கிருமி ஒழிப்பின் எஞ்சித் தேங்கும் விளைவு, சுத்திகரிப்புக்குப் பின்னர் ஏற்படும் மாசுபடுதலுக்கு எதிராகச் சிறிது பாதுகாப்பைத் தருகிறது.
- ● இந்தத் தயாரிப்புக்கள், பயன்படுத்துவதற்குச் சிக்கலானவை மற்றும் அதிகமான பயிற்சி மற்றும் தொடர் கண்காணிப்புத் தேவைப்படுகிறது.
- ● இந்தத் தயாரிப்புக்கள், தலா ஒரு லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீருக்கு வேதியியல் கிருமி ஒழிப்புத் தயாரிப்புக்களை விடக் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகமான விலையுள்ளவை மற்றும் தண்ணீர் கலங்கலாக இருக்கும்பொழுது அல்லது வேறு தயாரிப்பு எதுவும் கிடைக்கவில்லை என்றால் மட்டுமே இவை பயன்படுத்தப்படவேண்டும்.
- ● இந்தத் தயாரிப்புக்களை சரியாகப் பயன்படுத்துவதற்கு மக்களுக்கு ஒரு பாத்திரத்திற்கும் அதிகமாகத் தேவைப்படும்.

# வடித்தெடுத்தல்

வடிப்பான்கள் மண்ணைத் தடுத்து தண்ணீரை ஊடாக ஓடவிட்டுத் தண்ணீரிலிருந்து மண்ணை நீக்குகின்றன. மணல் அல்லது வெண்களிமண் போன்ற பொருளின் ஊடாக தண்ணீர் கடந்து செல்கிறது மற்றும் தீங்கான பொருட்கள் வடிப்பானில் பிடிக்கப்படுகின்றன.

ஆபத்துக்காலங்களில் பொதுவாக வடிப்பான்கள் பயன்படுத்தப்படுவதில்லை. இங்கு அவை அறிமுகம் மட்டும் செய்யப்படும் மற்றும் சுருக்கமாக விவரிக்கப்படும். வடிப்பான்கள் பற்றிய மேலும் விவரமான தகவல்கள் பிற ஆதாரங்களிலிருந்து (பார்க்க -அதிகப்படி வள ஆதாரங்கள்) கிடைக்கும்.

## உருளை வடிப்பான்கள்



உருளை வடிப்பான்கள் வெண்களிமண்ணால் செய்யப்படுகின்றன. தண்ணீர் ஒரு பாத்திரத்தினுள் ஊற்றப்படுகிறது மற்றும் மெதுவாக அந்த வெண்களிமண்ணின் ஊடாகக் கடந்து இன்னொரு பாத்திரத்துக்குச் செல்கிறது.



அந்த வடிப்பானில் அடைப்பு ஏற்பட்டு மற்றும் பாத்திரங்களுக்கு இடையேயான ஒழுக்கின் வேகம் குறைவாகும் பொழுதெல்லாம் வடிப்பான் ஒரு தூரிகையால் அழுத்தித் தேய்க்கப்படுகிறது.



சாத்தியமெனில், வடிப்பானில் பிடித்திருக்கும் நோய் விளைவிக்கும் கிருமிகளைக் கொல்வதற்கு வடிப்பான் கொதிக்கவைக்கப்பட வேண்டும்.

தண்ணீரின் அசுத்தம் அதிகரிக்க அதிகரிக்க வடிப்பான் சுத்தப்படுத்தப்படுவது மேலும் அதிகரிக்கிறது. தேய்ப்பதனால் உருளை நாளாவட்டத்தில் உருக்குலைந்துவிடும் மற்றும் மாற்றப்படவேண்டும்.

உருளை வடிப்பான்கள் நேர்மறையான மற்றும் எதிர்மறையான தன்மைகளைக் கொண்டிருக்கின்றன.

- ▲ இந்தத் தயாரிப்புக்கள், பயன்படுத்துவதற்கு எளிதானவை மற்றும் பாதுகாப்பானவை.
- ▲ சரியாகப் பராமரிக்கப்பட்டால், இந்தத் தயாரிப்பு, நீண்ட காலத்துக்கு சுத்தமான தண்ணீர் உற்பத்திசெய்வதற்குப் பயன்படுத்த முடியும்.
- ● இந்தத் தயாரிப்புக்கள், அதிக விலையுள்ளவை மற்றும் பல சமயங்களில் எளிதில் உடைந்துவிடக்கூடியவை.
- ● தண்ணீரைச் சுத்திகரிப்பதற்கு, குறிப்பாக, தண்ணீர் மிகவும் அசுத்தமாக இருக்கிறபோது, அது மிக அதிகமான நேரம் எடுத்துக்கொள்ள முடியும்.
- ● கிருமிஒழிப்பின் எஞ்சித்தேங்கும் விளைவு எதுவும் இல்லை, சுத்தத் தண்ணீர்ப் பாத்திரம் மாசுபடுதலுக்கு எதிரான பாதுகாப்புக்கு மூடி வைக்கப்படவேண்டும்.
- ● இந்தத் தயாரிப்புக்களுக்கு முறையான பராமரிப்பு தேவையானது மற்றும் அதிகமான பயிற்சி மற்றும் தொடர் கண்காணிப்பு தேவைப்படுகிறது.

## > மணல் வடிப்பானகள்

### > முன்-சுத்திகரிப்பு

மணல் மூலமாக வடித்தெடுப்பது தண்ணீரிலுள்ள மண்ணின் அளவினைக் குறைக்கிற வேகமான மற்றும் எளிமையான ஒரு முன்-சுத்திகரிப்புத் தேர்வாகும் மற்றும் இது கிருமி ஒழிப்பினை மேலும் விளைவுப்பயனுள்ளதாக்குகிறது.

பயனாளிகள் ஒரு பாத்திரத்திலிருந்து தண்ணீரை சரளையுடன் மணல் நிறைந்த அடிப்பகுதியில் ஒரு திறப்பு அல்லது குமிழ் இருக்கும் மற்றொரு பாத்திரத்தின் ஊடாக ஊற்றுகிறார்கள். பிறகு தண்ணீர் சேமித்து வைத்தல் பாத்திரத்திற்கு ஒழுகிச் செல்கிறது.

மணலின் ஊடாக முன்-சுத்திகரிப்பு நேர்மறையான மற்றும் எதிர்மறையான தன்மைகளைக் கொண்டிருக்கிறது.




- ▲ இந்த முறையானது எளிமையானது மற்றும் துரிதமாகப் பயன்படுத்தக்கூடியது.
- ▲ இது மண்ணை நீக்குவதில் மற்றும் நோய் விளைவிக்கும் சில கிருமிகளைக் களைவதில் விளைவுத்திறமுடையது. இது, தண்ணீர் சுத்திகரிப்பின் பிற வழிமுறைகள் மேலும் சிறப்பாகச் செயல்படச் செய்ய முடியும்.
- ▲ மணல் மற்றும் பாத்திரங்கள் உள்ளூரில் கிடைக்கிறதென்றால் இது செலவு குறைந்ததாகும்.
- ● இதற்கு மூன்று பாத்திரங்கள் மற்றும் ஒரு குமிழ் தேவைப்படுகிறது.

### > உயிரியல் மணல் வடிப்பான்கள்

ஆபத்துக்காலங்களில் பொதுவாகப் பயன்படுத்தப்படுவதில்லையென்றாலும்கூட, உயிரியல் மணல் வடிப்பான்கள் வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பில் விளைவுப்பயனுள்ள மற்றும் நீடித்து உழைக்கும் ஒரு வழிமுறையாகும். உயிரியல் மணல் வடிப்பான்கள் மணல் மூலமாகவும் மற்றும் வடிப்பான்களின் மேல்பகுதியில் வளர்கிற உயிரியல் பொருட்கள் மூலமாகவும் தண்ணீரை வடிகட்டுகிறது. அதில் அடைப்பு ஏற்படும்பொழுது வடிப்பான் சுத்தம் செய்யப்படுகிறது.

உயிரியல் அடுக்கு வளர்வதற்கு காலம் தேவைப்படுவதனால், இந்த வடிப்பான் முதலில் பயன்படுத்தப்படும்போது மற்றும் சுத்தப்படுத்தல்களுக்குப் பிறகு தண்ணீரைச் சரியாகச் சுத்திகரிக்காது.

பயன்பாட்டிற்கு எளிமையானவை என்ற போதிலும், இந்த வடிப்பான்கள் விநியோகிக்கப்படுகிற போது அவற்றிற்குச் செய்முறைப் பயிற்சி தேவைப்படுகிறது. இந்த வடிப்பான்களைக் கட்டுவது மற்றும் பராமரிப்பது குறித்த விவரங்கள் அதிகப்படி வள ஆதாரங்களில் காணமுடியும்.




- ▲ சரியாகப் பராமரிக்கப்பட்டால், இந்த வடிப்பான் நீண்ட காலத்திற்கு தண்ணீரைச் சுத்திகரிக்க முடியும்.
- ● இது, தண்ணீரைச் சுத்திகரிப்பதற்கு, சிறப்பாக, தண்ணீர் மிகவும் அசுத்தமாக இருக்கிறபோது, மிக அதிகமான நேரம் எடுத்துக்கொள்ள முடியும்.
- ● கிருமி ஒழிப்பின் எஞ்சித் தேங்கும் விளைவு எதுவும் இல்லை, சுத்தமான தண்ணீர் பாத்திரம் மாசுபடுதலுக்கு எதிரான பாதுகாப்புக்காக மூடி வைக்கப்பட வேண்டும்.
- ● இந்த வடிப்பான்களுக்கு முறையான பராமரிப்பு தேவை மற்றும் அதிகமான பயிற்சி மற்றும் தொடர் கண்காணிப்பு தேவைப்படுகிறது.

# பாதுகாப்பான சேமித்து வைத்தல் மற்றும் கையாளுதல்



தண்ணீர் தவறான முறையில் சேமித்து வைக்கப்பட்டால் அல்லது கையாளப்பட்டால், தண்ணீரை சுத்தப்படுத்துவதற்கு செய்யப்படுகிற அனைத்து முயற்சிகளும் பயனற்றுப் போகும்.

**ஆனால் அதிலொரு பிரச்சினை**

- குறுகலான கழுத்துள்ள பாத்திரங்கள் மாசுபடுதலைத் தடுக்கின்றன ஆனால் சுத்தம் செய்வது சிரமம்.
- அகலக் கழுத்துள்ள பாத்திரங்கள் எளிதில் மாசுபடுகின்றன ஆனால் சுத்தம் செய்வது எளிது.

ஆபத்துக்காலங்களில், மக்கள் ஏற்கனவே தமக்குச் சொந்தமாயுள்ள பாத்திரங்களை அல்லது நிவாரண நடவடிக்கையின்போது அவர்களுக்கு வழங்கப்பட்ட பாத்திரங்களைப் பயன்படுத்துவார்கள். அல்லது இரண்டையும். உங்களிடம் இருப்பதைக்கொண்டு பணியாற்றவும்.

பாத்திரங்களைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு, மூடி வைப்பதற்கு மற்றும் குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் வைப்பதற்கு மக்களை ஊக்குவிக்கவும். தண்ணீர் சேகரிப்பதற்கு மற்றும் சேமித்து வைப்பதற்கு மக்கள் வேறு வேறு பாத்திரங்களைப் பயன்படுத்தினால் மிகவும் சிறந்ததாகும்.



குறுகிய கழுத்துள்ள பாத்திரங்களுக்கு, சோப்புத் திரவம், வேதியியல் கிருமி ஒழிப்பான்(கிடைக்கிறதென்றால்) அல்லது கூழாங்கற்கள் கொண்டு வழக்கமாகச் சுத்தம் செய்வதற்கு மக்களை ஊக்குவிக்கவும்.



அகலக் கழுத்துள்ள பாத்திரங்களுக்கு, அவற்றை மூடி வைப்பதற்கும் மற்றும் தண்ணீர் எடுப்பதற்குத் தண்ணீரில் கைகள் படுவதைத் தவிர்க்கும் ஒரு முறைமையை வடிவமைத்துக்கொள்ளவும் மக்களை ஊக்குவிக்கவும். தண்ணீரைத் தொடாமல் சேகரிக்க அவர்களை அனுமதிக்கிற நீண்ட கையுள்ள அகப்பை அல்லது பாத்திரத்தின் அடிப்பகுதியில் ஒரு குமிழாக இது இருக்க முடியும். அவர்களுடைய பாத்திரத்தை வழக்கமாகச் சுத்தம் செய்யவும் அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

நீர் நிலையின் தரம் மேம்படுத்தப்பட்ட பின்னரும் கூட, தண்ணீர் சேமித்து வைத்தல் மற்றும் கையாளுதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்குச் செய்யப்படும் பிரச்சாரம் ஒரு சமூகத்தின் ஆரோக்கியத்திற்குப் பயனுள்ளதாயிருக்கும்.



குடிதண்ணீரைக் கையாளும் முன்னர் **எப்பொழுதும்** அவர்களுடைய கைகளைக் கழுவுவதற்கு மக்களை ஊக்குவிக்கவும். வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு வேதியியல் பொருட்களின் விநியோகங்கள், சோப்பு மற்றும் சுகாதாரச் செய்திகள் விநியோகிப்பதற்கு உகந்த வாய்ப்பினை வழங்குகின்றன.

# > வீட்டு உபயோகத் தண்ணீர்

# சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பான சேமித்து வைத்தல்-வீட்டு அளவில் பரப்புதல்



## > பயிற்சி

வேதியியல் பொருட்களின் பயன்பாட்டில் மக்களுக்குப் பயிற்சியளிக்காமல் அவற்றை **ஒருபோதும்** விநியோகிக்கக் **கூடாது.** விநியோகத்திற்கு முன்னதாக, எவ்வாறு பயிற்சியளிக்கப்படும் என்பதற்கு ஒரு திட்டம் வகுக்கவும். கீழே சொல்லப்பட்டுள்ள சுகாதார முன்னேற்ற நடவடிக்கைகள் சிலவற்றுடன் தொழில்நுட்பப் பயிற்சியினை இணைத்துக்கொள்ளப் பரிந்துரை செய்யப்படுகிறது.

சுத்திகரிப்பு வேதியியல் பொருட்களுக்கான அறிவுறுத்தல்கள், 20 லிட்டர் டப்பாக்கள் அல்லது 10 லிட்டர் வாளிகள் போன்று வழக்கமான அளவுகளுக்கு(பார்க்க- உண்மை விவரங்களின் பக்கங்கள்) இசைவாக இருக்கின்றன. மக்கள் மாறுபட்ட அளவுகளிலான பாரம்பரியப் பாத்திரங்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கக்கூடும். உதாரணமாக, ஒரு 14 லிட்டர் மட்பாண்டம். அவர்கள் புரிந்துகொண்டு அவர்களே தொடர்ந்து செய்வதற்கான ஒரு சரிசெய்தலைக் கண்டறிவதற்கு அவர்களுடன் செயல்படவும்.

**மக்கள் இத்தயாரிப்புக்களுடன், குறிப்பாக வேதியியல் பொருட்களுடன் முன் பரிச்சயமில்லாதவர்களாக இருக்கிறார்களென்றால், நம்பகத்தன்மைப் பிரச்சினைகள் எழக்கூடும். இந்தப் பிரச்சினையைத் தவிர்ப்பதற்கு ஒரு எளிய வழி, அந்தச் சமூகத்தின் கண்ணெதிரே நீங்களே அந்தத் தயாரிப்பினைப் பயன்படுத்திக் காட்டுவதுதான்.**

பயிற்சியளிக்கிற பொழுது, குளோரின் போதுமான அளவு நேரத்துக்கு தொடர்புடன் இருப்பதற்கு அல்லது பார்வையாளர்களுக்கு எதிரில் நீங்கள் குடித்துக் காட்டுவதற்குப் போதுமான அளவு தண்ணீரை வடிப்பான் சுத்திகரிப்பதற்குத் தேவையான நேரம் இருப்பதற்காக, முதலில் தயாரிப்புக்களின் பயன்பாட்டினை செய்முறைவிளக்கம் செய்வதற்கு முயற்சிக்கவும்.

## > சுகாதாரப் பிரச்சார நடவடிக்கைகள்

மக்களுக்கு வேதியியல் பொருட்களை வெறும் விநியோகம் செய்வது, அவர்களுடைய ஆரோக்கியத்தினை மேம்படுத்தாது. மக்களை, வீட்டு உபயோகத்தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் பதுகாப்பான சேமித்து வைத்தல் ஆகியவற்றைச் செய்யவைப்பது என்பது நடத்தை மாற்றத்தின் ஒரு வடிவமாகும்.

பரவலான நம்பிக்கைக்கு எதிர்மறையாக, பழக்கங்கள் அல்லது நடத்தையில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு எப்பொழுதும் நீண்டகாலம் ஆவதில்லை மேலும் ஆரோக்கியம் சார்ந்த ஆபத்துக்கள் அதிகமாக இருக்கையில் குறுகிய கால மாற்றங்கள் கூட முக்கியமானவையாக இருக்க முடியும். அவர்களே ஆபத்திலிருப்பதனை உணர்ந்தால், அப்போது மக்கள் அவர்களுடைய நடத்தையை சீக்கிரமாக மாற்றிக்கொள்வதற்கு மேலும் அதிக வாய்ப்புள்ளது.

ஆகையால், மாற்றத்திற்கான அந்த விருப்பம் செயல்படுத்தப்பட்டால், அது மிக விரைவில் நிகழ முடியும். உதாரணமாக தண்ணீரை வீட்டில் முறையாகச் சேமித்து வைப்பதற்குக் குடும்பங்களுக்கு தண்ணீர் பாத்திரங்கள் வழங்கப்படுகிறதென்றால். பெண்கள், ஆண்கள் மற்றும் குழந்தைகளை ஆரோக்கியம் சார்ந்த ஆபத்துகளைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு உதவுவது மற்றும் திரட்டுவது ஆகியவை வலியுறுத்தப்படவேண்டும். ஆரோக்கியக் கேடுகளுக்கான காரணங்கள் பற்றிய உணர்வினை வெறுமனே அதிகரிப்பதைவிடவும் அதிகமாக மக்களைப் பாதுகாப்பான சுகாதாரப் பழக்கங்களைக் கடைப்பிடிக்கச் செய்வதே இதன் பொருளாகும்.



ஒரு ஆபத்துக் காலத்தில், ஆரோக்கியம் சார்ந்த நன்மைகள் என்னும் புரிதல், மாற்றத்திற்கான முக்கியமான ஒரு உந்துசக்தியாக இருக்கக்கூடும். ஆனால் எல்லா சமயங்களிலும் அப்படியே இருக்கவேண்டுமென்பதில்லை. நடத்தை மாற்றத்திற்கு அதிகப்படியான உந்துகாரணிகளாக இருக்கக்கூடிய, அச் சமூகத்தின் கலாச்சார/பாரம்பரியத் தன்மைகளை அடையாளம் காணுதல் முக்கியமானதாகும். உதாரணத்திற்கு, அவருடைய பக்கத்து வீட்டிலிருப்பவர் பயன்படுத்துவதைப் பார்த்து ஒரு தாய் ஒரு குறிப்பிட்ட வகை தண்ணீர் சுத்திகரிப்பு வழிமுறையைப் பின்பற்றக் கூடும்.

சுகாதாரப் பொருட்களை வழங்குவதும் கூட மக்கள் சுகாதாரப் பிரச்சார நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்வதற்கு மக்களுக்கு ஒரு ஊக்கவூதியமாகச் செயல்பட முடியும்.

ஒரு ஆபத்துக்காலத்தில் பாதுகாப்பான சுகாதார நடத்தையினைக் கடைப்பிடிப்பதைப் பிரச்சரம் செய்வதில் பயன்படுத்த முடிகிற பல்வேறு கருவிகள் கிடைக்கின்றன. தயவு செய்து அதிகப்படி வள ஆதாரங்கள் பார்க்கவும்.

ªசோப்பு மற்றும் தண்ணீர் மற்றும் சுற்றுப்புறச்சுத்தம் தொடர்பான பிற உணவல்லாத பொருட்களை(NFI) விநியோகிப்பதற்கும் மற்றும் பாதுகாப்பான தண்ணீர் கையாளுதல் மற்றும் சேமித்துவைப்பு தொடர்பான முக்கியமான சுகாதாரச் செய்திகளைப் பரப்புவதற்கும், வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு வேதியியல் பொருட்களின் விநியோகங்கள் மிகப்பொருத்தமான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றன. விநியோகிக்கப்படுகிற பொருள்களின் ஆரோக்கியம் சார்ந்த நன்மைகள் குறித்துப் போதுமான தகவல்கள் மக்களுக்குத் தரப்படவில்லையெனில், மேலும் நல்ல ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தினை உதவுகிற ஒரு முக்கியமான வாய்ப்பு இழக்கப்படக்கூடும்.

**ஒரு ஆபத்துக்காலத்தில், சுகாதாரப் பிரச்சாரம் நடத்துவதற்கு நான்கு அடிப்படையான நடவடிக்கைகள்:**

## 1 தண்ணீர், சுற்றுப்புறச்சுத்தம் மற்றும் சுகாதாரத்தினை மையப்படுத்துகிற மதிப்பீட்டை நடத்தவும்

| தண்ணீர் | | | | | சுற்றுப்புற சுத்தம் | சுகாதாரம் |
|---|---|---|---|---|---|---|
| நீர்நிலை | நீர் சேகரிப்பு மற்றும் இடமாற்றம் | தண்ணீர் சேமித்து வைப்பு | தண்ணீர் சுத்திகரிப்பு | தண்ணீர்ப் பயன்பாடு | கழிவறை பயன்பாடு | கை கழுவுதல் |
| 1 நீர் நிலைகள் கவனத்துடன் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட வேண்டும்.<br>2 அருகிலுள்ள கழிவறைகள்கழிவுநீர்க் கால்வாய்கள், கால்நடைகள் அல்லது கிணற்றிற்குள் விழும் பொருட்கள் ஆகியவற்றினால் ஏற்படுகிற மாசுபடுதலுக்கான ஆபத்து எதுவும் இருக்கக்கூடாது. | 3 குடிதண்ணீர் கைகள் படாமல் சுத்தமான பாத்திரங்களில் சேகரிக்கப்பட வேண்டும்.<br>4 மூடப்பட்ட பாத்திரங்களில் தண்ணீர் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். | 5 தண்ணீர், மூடி வைக்கப்பட்ட வழக்கமாகச் சுத்தம் செய்யப்படுகிற சுத்தமான பாத்திரங்களில் சேமித்து வைக்கப்பட வேண்டும்.<br>6 இயன்றவிடத்தெல்லாம் குடிதண்ணீர் மற்ற வீட்டு உபயோகத் தண்ணீரிலிருந்து தனிப்பட்ட பாத்திரத்தில் சேமித்து வைக்கப்பட வேண்டும். | 7 நீர் நிலை சுத்தமாக இல்லையெனில் மற்றும் தண்ணீர் முறையாகச் சேமித்து வைக்கப்படவில்லையெனில், வீட்டு அளவில் தண்ணீர் சுத்திகரிப்பு நடைமுறைகள் செய்யப்பட வேண்டும். | 8 சேமிப்புப் பாத்திரத்திலிருந்து குடிநீர் கைகள், கோப்பைகள் அல்லது பிற பொருட்கள் தண்ணீரை மாசுபடுத்த முடியாதவாறு ஒரு அமிழ்த்தி அல்லது அகப்பையினால் எடுக்கப்படவேண்டும். | 9 திறந்த வெளியில் மலம் கழிப்பதற்குப் பதிலாக கழிவறைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.<br>10 கழிவறைகள் நீர்நிலைகளிலிருந்து தூரத்தில் அமைக்கப்படவேண்டும் மற்றும் சுத்தமாக வைக்கப்பட வேண்டும்<br>11 குழிகள் அவ்வப்போது காலிசெய்யப்படவேண்டும் அல்லது மாற்றப்பட வேண்டும். | 12 கைகளைக் கழுவுவதற்கு வீட்டில் சோப்பு மற்றும் தண்ணீர் இருக்கவேண்டும்.<br>13 முக்கியமான நேரங்களில் மக்கள் கைகளைக் கழுவிக்கொண்டிருக்க வேண்டும். |

## 2 இலக்குக் குழுக்களைத் தேர்வுசெய்க

ஆபத்துக்காலத்தின் ஆரம்ப நிலைகளில், நாம் பலசமயம் குறிப்பிட்ட இலக்குக் குழுக்கள் எதுவுமின்றி பெருமளவிலான பிரச்சார இயக்கம் நடத்துகிறோம். மாறாக, குறிப்பிடப்படுகிற நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்குப் பொறுப்பான குழுக்களைக் குறியாக்கி செய்திகளை வழங்குவதற்கு, குறிப்பிட்ட பார்வையாளர்களை நாம் அடையாளம் காணவேண்டுமெனப் பரிந்துரை செய்யப்படுகிறது.

உதாரணத்திற்கு, தண்ணீர் சேகரிப்பிற்குப் பொறுப்பாகக் குழந்தைகள் இருக்கும்பொழுது, சேகரிப்பு மற்றும் இடமாற்ற நடத்தைகள் தொடர்பான செய்திகளுக்கு அவர்களை இலக்காக்குதல் தேவைப்படுகிறது.

## 3 சுகாதாரச் செய்திகளை உருவாக்குங்கள்

**A** செய்திகள் ஒரு சில முக்கியபழக்கங்களை மையப்படுத்த வேண்டும்: எவ்வளவு குறைவாக இருக்கிறதோ அவ்வளவு நல்லது! மக்களின் மீது அளவுக்கதிகமான தகவல்களைத் திணிப்பது எதிர்மறையான விளைவினை ஏற்படுத்தக்கூடும்.

**B** செய்திகளை நேர்மறையான கண்ணோட்டத்தில் வழங்கவும் மற்றும் சாத்தியமுள்ள இடத்தில் நகைச்சுவையைப் பயன்படுத்தவும்.

**C** சுகாதாரப் பிரச்சாரச் செய்திகள் உள்ளூர் மொழியின் எளிமையான சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

சாத்தியமெனில், செய்திகள் சென்றடைய முயற்சிக்கிற குழுவினரின் அதே வயது, கல்வித்தகுதி மற்றும் கலாச்சாரம் கியவற்றுடனுள்ள ஒரு குழுவிடம் அச் செய்திகளை முன்-சோதனை செய்து பார்க்கவும்.



## 4 செய்தித் தொடர்பு முறையினைத் தேர்வு செய்க

செய்தித் தொடர்பு முறையின் தேர்வானது, பார்வையாளரின் தன்மை மற்றும் கிடைக்கின்ற வள ஆதாரங்களைச் சார்ந்திருக்கிறது. ஒரு ஆபத்துக்காலத்தில் மிகக் குறைந்த செலவில் மிகப் பரவலான பார்வையாளருக்கு செய்திகளின் அதிவேகப் பரவுதலுக்கு மிகப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் முறை, வெகுஜன ஊடகங்களாகும்.

விநியோகங்களின் போது மக்கள் நீண்ட நேரம் காத்திருப்பில் செலவிடுகிறார்கள். ஏராளமான மக்களுக்குச் செய்திகளை விரைவாக வழங்குவதற்கு இது மிகச் சரியான வாய்ப்பாகும்.

நாடகம், பாடல்கள், பொம்மலாட்டம் மற்றும் கதை சொல்லுதல் ஆகியவை (அவை பொழுது போக்கு அம்சத்தினை நடைமுறை ஆலோசனைகளுடன் இணைக்கின்றன) போன்ற பிரபலமான ஊடகங்களைப் பயன்படுத்தி அல்லது ஒலிபெருக்கிகள், சுவரொட்டிகள், சிற்றிதழ்கள், செய்திப்பலகைகள்,ஸ்டிக்கர்கள், டி ஷர்ட்டுகள் முதலான வெகுஜன ஊடகங்கள் மூலம் வழங்கிப் பல்வேறுபட்ட நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்கு விநியோகிப்பு முனைகளைப் பயன்படுத்தவும்.

வெகுஜன ஊடகங்கள் வழியாகக் கொடுக்கப்பட்ட செய்திகளை நேர்முக நடவடிக்கைகள் மூலம் மேலும் திண்மைபெறச் செய்ய முடியும். வீடு வீடாகச் செல்வது போன்ற இந்த நடவடிக்கைகள் NFI விநியோக நடவடிக்கைகளுடன் இணையாகச் செய்யப்படக்கூடும்.

வீடுவீடாகச் செல்வது, சுகாதாரப் பிரச்சாரம் செய்பவருக்கு வீட்டின் குடும்பச்சூழ்நிலையை மதிப்பீடு செய்யவும் மற்றும் சுகாதாரச் செய்திகளைக் குடும்பத்தின் குறிப்பிட்ட தேவைகளுக்கேற்ப வடிவமைக்கவும் ஒரு வாய்ப்பினை அளிக்கிறது.

**வீடுகளுக்குச் செல்லும்பொழுது கருத்தில் கொள்வதற்கு சில உதவித்தகவல்கள்:**

- வீடுகளுக்குச் செல்வது உணர்வுபூர்வமாகக் கையாளப்படுதல் தேவை. ஒரு ஆபத்துக்காலத்தில் கூட, ஒரு சில 'சம்பிரதாயங்கள்' மதிக்கப்படவேண்டும்.
- சராசரியாக ஒரு தன்னார்வ ஊழியர் ஒரு வேலை நாளில் (4 மணி நேரம்) 5-6 வீடுகளுக்குச் செல்ல முடியும்.
- ஃப்ளிப்ச்சார்ட்டுகள்,சுவரொட்டிகள் அல்லது சித்திர அட்டைகள் வடிவிலான காட்சிச் சாதனங்கள் விவாத ஊக்குவிப்பிற்கு மிகவும் பயனுள்ளவை.
- வீடுகளுக்குச் செல்லும் நேரத்தினை கவனமாகத் திட்டமிடத் தேவை மற்றும் சாத்தியமெனில் செல்லும் நேரத்தினை கிராமத்தினருக்கு முன்கூட்டியே தெரிவிப்பது தேவையாகிறது. ஒரு ஆபத்துக்காலத்தில் வாழ்வதற்கு அடிப்படை அத்தியாவசியங்களைப் பாதுகாப்பதில் மக்கள் முனைப்பாக இருப்பார்கள்.

## > கண்காணித்தல்

இந்த முறைகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்னும் ஒரு பாடம் போதுமானதன்று. ஆரம்பப் பயிற்சிக்குப் பிறகு தொடர்ந்த பயிற்சி மற்றும் கண்காணித்தல் செய்யப்பட வேண்டும்.

சுகாதாரப் பிரச்சாரகர்கள் கீழ்க்கண்டவை தொடர்பாக சமூகத்திலுள்ள மாற்றங்களைக் கண்டறிய இயலவேண்டும்:

- தேர்வு செய்யப்பட்ட தயாரிப்பு குறித்து மக்களுடைய திருப்தி
- தயாரிப்புக்களின் சரியான பயன்பாடு
- தண்ணீரைக் கையாளுதல் மற்றும் சேமித்து வைத்தல் தொடர்பாக வீட்டு அளவில் மக்களின் சுகாதாரப் பழக்கங்கள்.

## > வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் சேமித்து வைப்புத் தீர்மானம் காட்சிமரம்

**நீர் நிலை மாசுபட்டுள்ளதா?**

- ஆம்
- இல்லை: பாதுகாப்பான தண்ணீர் சேமித்து வைத்தல் மற்றும் கையாளுதல் பிரச்சாரம் செய்க

**தயாரிப்புக்கள் சமுதாயத்திற்கு வெளியிலிருந்து சந்தையில் கிடைக்கின்றனவா அல்லது மனிதாபிமான அடிப்படையிலான கொடையாகவா?**

- இல்லை:
  - **தண்ணீர் மண் கலங்கியிருக்கிறதா?**
    - இல்லை:
      - **விறகு அல்லது இன்னொரு எரிபொருள் தயாராக்க் கிடைக்கிறதா?**
        - இல்லை: வடிகட்டுதல், மூன்று பாத்திர வழிமுறை அல்லது அடிப்படை வடித்தலை அடிக்கடி சுத்தம் செய்யப்படுதலுடன் பிரச்சாரம் செய்யவும். பாதுகாப்பான தண்ணீர் சேமித்து வைப்பு மற்றும் கையாளுதலையும் பிரச்சாரம் செய்க.
        - ஆம்: கொதிக்கவைத்தல் மற்றும் பாதுகாப்பான தண்ணீர் சேமித்து வைத்தல் மற்றும் கையாளுதல்களைப் பிரச்சாரம் செய்க. பொறுப்புள்ள விறகு சேகரிப்பு மற்றும் மரம் வளர்ப்பினையும் பிரச்சாரம் செய்க.
    - ஆம்: நீர் நிலையின் தண்ணீரின் தரத்தினை மேம்படுத்த முடிகிற வரையில் அல்லது பிற வழிமுறைகள் கிடைக்கிற வரையில், மூன்று பாத்திர வழிமுறையினை அல்லது சூரிய ஒளியினால் கிருமி ஒழிப்பு மற்றும் பாதுகாப்பான சேமித்துவைப்பு மற்றும் கையாளுதலைப் பிரச்சாரம் செய்யவும்.
- ஆம்
  - **தண்ணீர் மண்கலங்கலாக இருக்கிறதா?**
    - ஆம்: வடிகட்டுதல், மூன்று பாத்திர வழிமுறை, வேதியல் தெளிவித்தல் அல்லது அடிக்கடியான சுத்தப்படுத்தலுடனான வடித்தல் ப்ரச்சாரம் செய்க. பாதுகாப்பான தண்ணீர் சேமித்து வைப்பு மற்றும் கையாளுதலையும் பிரச்சாரம் செய்யவும்.
    - இல்லை:
      - **தண்ணீர் கலங்கலாக இருக்கிறதா?**
        - இல்லை: ஒரு சாதாரண அளவிலான வேதியல் கிருமி ஒழிப்பினைப் பயன்படுத்தவும். பாதுகாப்பான சேமித்துவைப்பு மற்றும் கையாளுதலையும் பிரச்சாரம் செய்யவும்
        - ஆம்: இரட்டிப்பு அளவு வேதியல் கிருமி ஒழிப்பினைப் பயன்படுத்தவும். பாதுகாப்பான தண்ணீர் சேமித்துவைத்தல் மற்றும் கையாளுதலைப் பிரச்சாரம் செய்யவும்.



உலகெங்கிலும் ஏறத்தாழ 100 கோடி மக்கள் பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைக்காமல் இருக்கிறார்கள். 40 லட்சம் மக்கள், அதில் பெரும்பாலானவர்கள் இளம் குழந்தைகள், இதன் விளைவாக வருடம்தோறும் மரணமடைகிறார்கள்.



கடந்த 15 வருடங்களில், சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் கூட்டமைப்பு, 90 லட்சத்திற்கும் அதிகமான மக்களுக்குத் தண்ணீர் மற்றும் சுற்றுப்புறச்சுத்தம் நிகழ்ச்சிகள் மூலம் சேவை செய்திருக்கிறது. மேலும் அதிகப்படியாக 1 கோடியே40லட்சம் மக்கள் 2015 க்குள் பயனடைவர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

சர்வதேசக் கூட்டமைப்பு

## > உண்மை விவரங்களின் பக்கங்கள்

கீழ்க்காணும் உண்மை விவரங்களின் பக்கங்கள் பெருமளவில் நகலெடுப்பிற்கும் மற்றும் இந்தக் கையேட்டில் விவாரிக்கப்பட்டுள்ள பல்வேறு வழிமுறைகளின் கல்வி மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் விநியோகிப்பதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# மூன்று பாத்திர வழிமுறை

**குடிதண்ணீர்:** எப்போதும் பாத்திரம் 3-லிருந்து தண்ணீரை எடுக்கவும். இந்தத் தண்ணீர் குறைந்த்து இரண்டு நாட்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது மற்றும் அதன் தரம் மேம்பட்டுள்ளது. இந்தப் பாத்திரம் அவ்வப்போது கழுவப்படும் மற்றும் கொதிக்கின்ற தண்ணீரில் சுடவைக்கப்பட்டு கிருமிநீக்கம் செய்யப்படலாம்.










ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொன்றிற்குத் தண்ணீரை வடிப்பதற்கு வளையக்கூடிய குழாயினைப் பயன்படுத்துதல், ஊற்றுவதை விடவும் குறைவாக அடி வண்டல்களைக் கலைக்கிறது.

**வீட்டிற்குப் புதிய தண்ணீரைக் கொண்டுவருகிற ஒவ்வொரு நாளும்.**

பாத்திரம் 2-ல் சேமித்து வைக்கப்பட்டுள்ள தண்ணீரினை மெதுவாக பாத்திரம் 3-ல் ஊற்றவும், பாத்திரம் 2-ஐ கழுவவும்.

பாத்திரம் 1-ல் சேமித்து வைக்கப்பட்டுள்ள தண்ணீரினை மெதுவாக பாத்திரம் 2-ல் ஊற்றவும், பாத்திரம் 1-ஐ கழுவவும்.

நீர்நிலையிலிருந்து(வாளி 4) சேகரிக்கப்பட்ட தண்ணீரை பாத்திரம் 1-ல் ஊற்றவும். அதனை ஒரு சுத்தமான துணியின் மூலம் வடிகட்டுவதற்கு நீங்கள் விரும்பிடக் கூடும்.



**உதவித்தகவல்:**
பாத்திரங்களில் ஊற்றுகிற பொழுது, ஒரு வடிகட்டுகிற துணியைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த முறையினை மேம்படுத்த முடியும்.

# தண்ணீரை வாட்டர்கார்டினால் (Sûr'Eau) சுத்திகரிப்பது எப்படி



உங்களுடைய கைகளை,
தண்ணீர் மற்றும் சோப்பு
அல்லது சாம்பல்
கொண்டு கழுவவும்



உங்கள் தண்ணீர் தெளிவாக
இருக்கிறதா?




20 லிட்டர் தண்ணீருக்கு
1 காப்ஸ்யூல்களைச் சேர்க்கவும்.
பாத்திரத்தை மூடவும்.



உங்கள் தண்ணீர்
அழுக்காகக் காணப்படுகிறதா?



தண்ணீரினை துணியின்
மூலம் வடிகட்டவும்.




30 நிமிடங்கள்
காத்திருக்கவும்.



இப்பொழுது தண்ணீர் தயார்.




20 லிட்டர் தண்ணீருக்கு
2 காப்ஸ்யூல்களைச்
சேர்க்கவும்.
பாத்திரத்தை மூடவும்.




30 நிமிடங்கள்
காத்திருக்கவும்.



இப்பொழுது தண்ணீர் தயார்.

# தண்ணீரை குளோரின் மாத்திரையால் சுத்திகரிப்பது எப்படி



உங்களுடைய கைகளை, தண்ணீர் மற்றும் சோப்பு அல்லது சாம்பல் கொண்டு கழுவவும்.



உங்கள் தண்ணீர் தெளிவாக இருக்கிறதா?




ஒரு மாத்திரையை பாத்திரத்தினுள் போடவும். பாத்திரத்தை மூடவும்.



உங்கள் தண்ணீர் அழுக்காகக் காணப்படுகிறதா?



தண்ணீரினை துணியின் மூலம் வடிகட்டவும்.




30 நிமிடங்கள்
காத்திருக்கவும்.



இப்பொழுது
தண்ணீர் தயார்.




இரண்டு
மாத்திரைகளைப்
பாத்திரத்தில் சேர்க்கவும்.
பாத்திரத்தை மூடவும்.




30 நிமிடங்கள்
காத்திருக்கவும்.



இப்பொழுது
தண்ணீர் தயார்.

# தண்ணீரை வாட்டர்மேக்கரால் சுத்திகரிப்பது எப்படி




உங்களுடைய கைகளை, தண்ணீர் மற்றும் சோப்பு அல்லது சாம்பல் கொண்டு கழுவவும்.




வாட்டரமேக்கர் உறையின் உள்ளிருப்பனவற்றை வாளிக்குள் ஊற்றவும்.




சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரினை ஒரு சுத்தமான வடிப்புத் துணியின் மூலமாக ஒரு பாத்திரத்தினுள் ஊற்றவும்.




உங்கள் தண்ணீர் குடிப்பதற்குத் தயார் நிலையில் உள்ளது.




இந்தக் கலவையினை
5 நிமிடங்கள் கலக்கவும்.




15 நிமிடங்கள் காத்திருக்கவும்.




தண்ணீர் மஞ்சள் நிறத்தில்
இருந்தால் குடிக்காதீர்கள்.




உங்கள் தண்ணீரினை ஒரு
மூடிய பாத்திரத்தில்
சேமித்து வைக்கவும்.

# தண்ணீரை PUR உறையினால் சுத்திகரிப்பது எப்படி



உங்களுடைய கைகளை, தண்ணீர் மற்றும் சோப்பு அல்லது சாம்பல் கொண்டு கழுவவும்.




PUR உறையின் உள்ளிருப்பனவற்றை 10 லிட்டர் வாளிக்குள் ஊற்றவும்.




சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரினை ஒரு சுத்தமான வடிப்புத் துணியின் மூலம் ஒரு பாத்திரத்தினுள் ஊற்றவும்.

## 2. கலக்கவும்

**5 நிமிடங்கள்**




நன்றாகக் கலக்கவும்.

**5 நிமிடங்கள்**




தண்ணீரை அப்படியே விடவும்.

தண்ணீர் தெளிவாக இல்லையெனில், மிதக்கும் அழுக்குக் கசடு பிரிக்கப்படுகிற வரையில் மீண்டும் கலக்கவும்.

கலவையை 5 நிமிடங்கள் கலக்கவும்.
5 நிமிடங்கள் காத்திருக்கவும்.




**20 நிமிடங்கள்**

20 நிமிடங்கள் காத்திருக்கவும்.

## 4. குடிக்கவும்






தண்ணீர் மஞ்சள் நிறத்தில் இருந்தால் குடிக்காதீர்கள்.

உங்கள் தண்ணீர் குடிப்பதற்குத் தயார் நிலையில் உள்ளது. உங்கள் தண்ணீர் மஞ்சளாக இருந்தால் குடிக்காதீர்கள்.

## > அதிகப்படி வள ஆதாரங்கள்

**வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு உண்மை விவரங்கள் பக்கங்கள்**
http://www.lboro.ac.uk/well/resources/fact-sheets/fact-sheets-htm/Household%20WT.htm

**ஆபத்துக்காலங்களில் களத்தில் தண்ணீரின் தரத்தினைச் சோதித்தல்**
http://www.lboro.ac.uk/well/resources/fact-sheets/fact-sheets-htm/WQ%20in%20emergencies.htm

**சுகாதாரப் பிரச்சாரம்**
http://www.ifrc.org/what/health/water/hygiene.asp

**குடிதண்ணீரின் தரம்**
http://www.who.int/water_sanitation_health/dwq/en/

## குறிப்பு

## குறிப்பு

# வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் சேமித்து வைப்பு

இந்தச் சிறு புத்தகம், தண்ணீர்ப் பிரச்சினைகள் உட்கொள்கிற ஆபத்துக்காலங்களில் எதிர்வினைசெய்கிற செஞ்சிலுவை/செம்பிறைக் களப்பணியாளர் மற்றும் தன்னார்வ ஊழியர்களை இலக்காகக் கொண்டிருக்கிறது. வீட்டு உபயோகத் தண்ணீரின் தரத்தினை மேம்படுத்துவதற்குக் கிடைக்கிற பல்வேறு தேர்வுகளை இந்தக் கையேடு வழங்குகிறது.

உட்படுகிற உள்ளடக்கங்கள்:

- தண்ணீரின் தரம் குறித்த ஒரு மேல் நோட்டம்
- வீட்டு அளவில் பல்வேறு வழிகளில் தண்ணீரைச் சுத்தப்படுத்துவது எப்படி
- வீட்டு உபயோகத்தண்ணீரை முறையாகச் சேமித்துவைப்பது மற்றும் கையாளுவது எப்படி
- தண்ணீரின் தரத்தினை மேம்படுத்தும் சரியான வழிமுறையினை தேர்ந்தெடுப்பது எப்படி
- வீட்டு உபயோகத் தண்ணீர் சுத்திகாரிப்பு மற்றும் சேமித்து வைப்பின் பயன்பாட்டினை பிரச்சாரம் செய்வது எப்படி

ஒரு நிவாரண நடவடிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, பயன்பெறுவோர் குறிப்பிட்ட சுத்திகரிப்பு வழிமுறையில் பயிற்சி பெறுவது தேவையாகும். இந்தப் பயிற்சியினைச் செய்வதில் பயன்படுத்துவதற்காக தன்னார்வ ஊழியர்களுக்கு விநியோகிக்கப்படுவதற்காக சுருக்கமான உண்மை விவரங்கள் இந்தக் கையேட்டில் உள்ளன.

For more information, contact


Indian Red Cross Society

**National Headquarters**
1, Red Cross Road, New Delhi - 110001
Phones: +91 11 23716441/2/3
Fax: +91 11 23717454
Web site: www.indianredcross.org

International Federation of Red Cross and Red Crescent Societies

**Regional Delegation for South Asia - India Office**
1, Red Cross Road, New Delhi - 110 001, INDIA
Telephone: +91 11 2332 4203/06/10/13
Facsimile: +91 11 2332 4235

**Water and sanitation unit, Health and care department**

International Federation of Red Cross and Red Crescent Societies

P.O. Box 372, CH-1211 Geneva 19, Switzerland
Telephone: +41 22 730 4222
Telefax: +41 22 733 0395
E-mail: secretariat@ifrc.org


For further information, please visit the International Federation web site: **www.ifrc.org**